


# மருத்துவத்தில் ஒரு மாணிக்கம்

## டாக்டர். ராஜன் ரவிச்சந்திரன் -




"உப்பு பாத்திரம் எடுப்பதைத் தவிர்க்கவும்"
"உங்களின் ரத்த அழுத்தத்தைத் தொடர்ந்துக் கண்காணிக்கவும்"
"சத்தான சீரான உணவு சாப்பாட்டை தேர்வு செய்து சாப்பிடவும்"
"உப்பற்ற அல்லது குறைந்த உப்பு உள்ள உணவை எடுக்கவும்"
"அதிக சோடியம் அல்லது அதிக சக்கரை பொருட்களை தெரிந்துக் கொள்ள பல வண்ணங்களில் லேபிள் செய்யவும்"

டாக்டர்.ராஜன் ரவிச்சந்திரன், மிகவும் புகழ் பெற்ற ஒரு சிறுநீரக மருத்துவர், எல்லோராலும் ஆர்.சி என்று அன்பாக அழைக்கப்படும் "உப்பு டாக்டர்". தன் வாழ்க்கையையே சிறுநீரக நலத்துறைக்காக அர்ப்பணித்து, மிகவும் சிக்கலான சிறுநீரக பிரச்னைகளுக்கு தீர்வாக, நடைமுறைக்கேற்ற அணுகுமுறையை செயல்படுத்துபவர். நல்ல சத்தான உணவு உட்கொண்டு, சிறிது வாழ்வியல் மாற்றங்கள் செய்து, உடல் நலத்திற்கேற்ற நல்ல விஷயங்களை தேர்வு செய்து அவற்றை பின்பற்றினால், அதுவே ஒருவருக்கு உடல் நிலைப் பிரச்னைகள் வராமல் இருக்கவும், பிரச்னைகளுக்கு தீர்வாகவும் இருக்கும் என்று உறுதியாக நம்புகிறார்.

அவரின் கொள்கைகள், அணுகுமுறை, வெற்றி பற்றி உரையாடும் போது, அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தியது, நோயாளிகளின் உடல் நலப் பிரச்னைகளைத் தடுக்கவும், பிரச்னைகள் பற்றி ஆய்வு செய்யவும், சரியான சிகிச்சை கொடுக்க வேண்டும் என்று வரும் போது, நோயாளிகள் மற்றும் மருத்துவர்களின் மனப்போக்கு மிகவும் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதே!!.

வீட்டின் ஏழாவது பிள்ளையாக இருந்ததால், அவரின் சகோதர சகோதரிகள் அனைத்து தொழில் துறைகளையும் தேர்ந்தெடுத்து விட்டதை பார்த்த அவர், தான் மருத்துவம் படிக்க முடிவு செய்தார். அவருக்கே தெரியாமல் அவர் சிறுநீரகவியல் துறையில் சேர்ந்து தன் வாழ்க்கையையே அதற்கு அர்ப்பணித்தார். அவரின் துறையில் அவர் சிறந்த நிபுணர் என்பதால், எண்ணற்ற சிறுநீரக நோயாளிகளின் வாழ்க்கையை மாற்றி, உயிர் காக்கும் வழிகளைப் பின்பற்ற சொல்லிக் கொடுத்து, அதன் மூலம் அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, நீண்ட காலம் வாழவும் வழி வகுத்தார்.

மும்பை கல்லூரியில் மிக சிறப்பாகப் படித்த டாக்டர்.ராஜன் ரவிச்சந்திரன், அந்த பல்கலைக்கழகத்தின் முதல் நிலையில் தேர்ச்சிப் பெற்றதால் அவருக்கு கல்வி உதவித்தொகைக் கிடைத்ததோடு, அங்கு மருத்துவத் தலைமையில் இருந்த சிறு நீரகவியல் துறைத் தலைவரிடம் வேலை பார்க்கும் வாய்ப்பும் கிடைத்தது. இதுவே அவரின் துறையில் அவரின் வெற்றிப் பயணத்தின் ஆரம்பமாக இருந்தது. இப்படியே சில வருடங்களில் தன் திறமையை நன்கு வளர்த்துக் கொண்டு, அப்படியே மும்பையில் உள்ள கே.எம்.மருத்துவமனை மற்றும் ஜி.எஸ்.மருத்துவக் கல்லூரியில் ஆசிரியராக சேர்ந்து, துணைப் பேராசிரியராக உயர்ந்தார். இந்த காலம் அவருக்கு மருத்துவக் கல்வியின் எதையும் மாற்றக்கூடிய சக்தியும், நோயாளிகளின் வாழ்வில் அது செய்யக்கூடிய ஆழ்ந்த தாக்கத்தையும் பார்க்க முடிந்தது.

டாக்டர்.ரவிச்சந்திரன், சென்னையில் தன் மருத்துவப் பயணத்தை தொடங்கியது, 1983-ல் அப்போலோ மருத்துவமனையில் சேர்ந்த போது தான். சிறு நீரகவியல் துறையில் ஒரு குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அவரின் விருப்பம், ஒரு வருடத்திலேயே, அதாவது 1984-ல் விஜயா மருத்துவமனையில் 'மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் நெஃப்ராலஜி'யைத் தொடங்க செய்தது. இங்கே, தேவைப்பட்ட நோயாளிகளுக்கு அவரவருக்கேற்றவாறு தனிப்பட்ட சிறுநீரக சேவைகள் செய்வதில் அவர் கவனம் செலுத்தியது, அவரது மருத்துவ தொழிலில் ஒரு புதிய அத்தியாயமாக குறிக்கப்பட்டது. 2008-ல், டாக்டர்.ரவிச்சந்திரன் 'மெட்ராஸ் இன்ஸ்டிட்யூட் ஆஃப் நெஃப்ராலஜி'யை மியாட் மருத்துவமனையுடன் இணைத்தார். தற்போது அங்கே தான் 'டைரக்டர் ஆஃப் நெஃப்ராலஜி' ஆக இருக்கிறார். மியாட் மருத்துவமனையுடன் இணத்தது, அவர் தன் பணியை விரிவுபடுத்தியதோடு, உயர்தர டெக்னாலஜியைப் பயன்படுத்தி எண்ணற்ற நோயாளிகளுக்கு சிகிச்சை





அளிக்க வழி வகுத்தது. டாக்டர்.ரவிச்சந்திரனின் அர்ப்பணிப்பும், நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சையை மேம்படுத்த வேண்டும் என்ற அவரின் முயற்சியும், சிறுநீரகவியல் துறையில் புது விதமான, புரட்சிகரமான சிகிச்சையை அறிமுகப்படுத்த செய்தது.

டாக்டர்.ஆர்.சி முன்னோடியாக இருந்து கண்டுப்பிடித்தது பாலியலிலாமைன் பாஸ்பேட் பைண்டர் என்ற பயன்பாட்டில் உள்ள மருந்து. இது கால்ஷியம் இல்லாத ரெஸின் கொண்ட ஒரு வஸ்து, சிறுநீரக நோயளிகளில் பொருத்தி பாஸ்பரஸ் உருவாகுவதை தவிர்ப்பது ஆகும். இந்த மருந்து வெளி நாட்டில் கிடைத்தாலும், இந்தியாவில் கிடைப்பது மிகப்பெரிய சவாலாக இருந்தது. இந்த சவாலை சமாளிக்க, நாடு முழுவதும் மிக அதிகமாக பயன்படுத்தப்படும் அவரின் இந்த அரிய கண்டுபிடிப்புக்கு காப்புரிமை வாங்க, டாக்டர்.ஆர்.சி ஐ.ஐ.டி சென்னையுடன் சேர்ந்தார்.

1988-ல், டாக்டர்.ஆர்.சி அவரின் மற்றுமொரு குறிப்பிடத்தக்க கண்டுப்பிடிப்பான, சிறப்பம்சம் கொண்ட ஒரு டையாலிஸிஸ் மிஷின் உருவாக்குவதில் மிக முக்கிய பங்கு வகித்தார். ஒரு முழுமையான டையாலிஸிஸ் மிஷினுக்கு பதில், அவர் ஒரு சிறிய மாடல் மிஷினை உருவாக்கினார். இந்த மிஷின், நோயாளியின் அவசரசிகிச்சை நேரங்களில் உடலில் அதிகமாக இருக்கும் நீரை அகற்ற உதவுகிறது. உடனடியாக கிடைக்க வேண்டும், கட்டுப்படியாகும் விலையில் இருக்க வேண்டும் என்பதற்கு முக்கியத்துவம் கொடுத்ததன் மூலம், இந்த கண்டுப்பிடிப்புகள் சிறுநீரகவியல் துறையை உயர்த்தியதோடு, எண்ணற்ற நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கவும் உதவியது.

டாக்டர்.ஆர்.சி-யின் அபாரமான திறமை, சிறுநீரகவியல் துறையில் அவரை எல்லோரையும் மிஞ்சிய ஒரு சிறந்த மருத்துவராக விளங்கச் செய்தது. வேண்டியவைக்கு முக்கியத்துவம் கொடுப்பது, நடைமுறைக்கேற்ற தீர்வுகள் சொல்வது, உடனடி முடிவுகள் எடுப்பது, பொருத்தமான நபர்களுடன் தொடர்பு கொள்வது, எல்லோருக்கும் கிடைக்கவும், கட்டுப்படியான விலையில் இருப்பதையும் உறுதி செய்வது போன்ற குறிப்பிடத்தக்க திறமைகள் அவரிடம் இருந்தது.

அவரின் கிளினிக் வேலை தவிர, டாக்டர்.ரவிச்சந்திரன் சமூகத்திற்கு சேவை செய்வதிலும் தன்னை ஆழமாக அர்ப்பணித்துக் கொண்டார். 1997-ல் அவர் 'சேபியன்ஸ் ஹெல்த் ஃபவுண்டேஷன்' ஆரம்பித்தார். ஒரு நோயாளியைப் பார்த்த அந்த நிமிடமே அவருக்கு பார்க்கின்ஸஸ் நோய் இருப்பதைக் கண்டு, அவருக்கு சிகிச்சை அளித்து குணமாக்கிய அந்த தருணம் தான், இந்த ஃபவுண்டேஷன் ஆரம்பிக்க ஒரு தீப்பொறியாக இருந்தது.

இந்த ஃபவுண்டேஷன் சிறு நீரக நோயாளிகளுக்கு வேண்டிய ஆதரவும், பண உதவியும் கொடுப்ப தோடு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் நோக்கமாகக் கொண்டு இயங்குகிறது. முதலில் ஆரம்பித்தபோது, குறைந்த விலையில் டயாலிஸிஸ் மற்றும், டிரான்ஸ்பிளாண்ட்டுக்கு பிறகான மருந்து ஆகியவைக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டாலும், சில வருடங்களுக்கு பிறகு நோய் தடுப்பு முறைகளும், சிறு நீரக நோயால் தாக்கப்பட்டவர்களுக்கு சரியான சிகிச்சையும் கொடுப்பதை நோக்கமாக கொண்டு இயங்கியது.

'சேபியன்ஸ் ஹெல்த் ஃபவுண்டேஷன்', தேசம் முழுவதும் சொற்பொழிவுகள், சென்னை சுற்றியுள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளில் புரோட்டீன் பரிசோதனைகள், நடைப்பயணங்கள், வலைதளங்கள், மருத்துவ விழிப்புணர்வு சிற்றேடுகள்,'சேவ் யுவர் கிட்னி' என்ற இரண்டு பதிப்புகள் ஆகியவை மூலம் மக்களிடையே விழிப்புணர்வைப் பரப்பியது. மேலும், சிறு நீரகத் துறையில் பிரபலமாக இருக்கும் கல்லூரி மற்றும் பேராசிரியர்களுடன் இணைந்து 'உப்பு குறைப்பு' மாநாடு மற்றும் பிரச்சாரங்கள் ஏற்பாடு செய்தது. மார்ச் '23-ல், அதனுடைய வெள்ளி விழா கொண்டாட்டத்தை முன்னிட்டு, நோயாளிகள் மற்றும் இந்த ஃபவுண்டேஷன்' மூலம் சிகிச்சை பெற்று குணமடைந்த பலரையும் வரவழைத்து அவரவர்களின் உயிர் பிழைத்த, வாழ்க்கை மாறிய அனுபவத்தைப் பகிர செய்தனர்.

ஒரு குழந்தை நோயாளிக்கு கண்ணில் அரிதாக வரும் சிஸ்டினாஸிஸ் என்ற நோய் வந்த போது, அந்த குழந்தையின் சிகிச்சைக்கு ஒரு வருடத்திற்கு பல லட்சங்கள் ஆவதை அறிந்தார். இது டாக்டர்.ஆர்.சி அவர்களை 2013-ல், சிஸ்டினாஸிஸ் ஃபவுண்டேஷனை அமைக்க ஊக்குவித்தது. இந்த ஃபவுண்டேஷன் சிஸ்டினாஸிஸ் வந்த நோயாளிகளின் குறிப்பிட்டத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காகவே இயங்கப்பட்டது. இதுவரை, இங்கு 46 குழந்தைகள் பதிவு செய்துள்ளார்கள், இது சிஸ்டினாஸிஸ் நோய்க்காக உலகெங்கும் இருக்கும் 11 ஃபவுண்டேஷன்களில் ஒன்றாகும்.

கோவிட்-19 பாண்டெமிக் போது, டாக்டர்.ரவிச்சந்திரன் அவர்கள், 1960-ல் ரூமடாய்ட் ஆர்த்ரைடிஸ் நோய்க்கு பயன்படுத்தப்பட்ட இண்டோமெதஸின் என காப்புரிமை பெற்ற மருந்து, கோவிட்-19 நோய் சிகிச்சைக்கு பயன்படுத்தப்படலாம் என்பதைக் கண்டுப்பிடித்தார். ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்ததில், கோவிட்-19 நோயால், நுரையீரலில் ஏற்படுத்தும் தாக்கத்துக்கும் அதன் தன்மைக்கும், இண்டோமெதஸின் ஒரு நல்ல நோய் காப்பு மருந்தாக இருக்கும் என்று நினைத்தார். சில மருத்துவ சோதனைகள் செய்ததில், இந்த மருந்தால், நோயாளிகளின் உடல் நிலையில் நல்ல முன்னேற்றமும், வீக்கம் குறைவதும், ரத்தம் உறைவது தடுப்பதும் ஆகிய பலன்களைப் பார்க்க முடிந்தது. டாக்டர்.ஆர்.சி இந்த பரிசோதனையை அவரின் நோயாளிகள் பலருக்கும் சிகிச்சையாக கொடுக்க, அவர்கள் அனைவரின் உடல் நலத்தில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது குறிப்பிடத்தக்கது. இதற்கு உதாரணம், மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருந்த ஒரு கோவிட்-19 நோயாளி தனக்கு நன்றாக குணமடைந்தவுடன், தன் ஏர் ஆம்புலன்ஸ் ஒதுக்கீடை ரத்து செய்ததோடு, டாக்டர்.ஆர்.சி. அவர்களைத் தொடர்பு கொண்டு தன் உயிரைக் காப்பாற்றியதற்கு தன் நன்றியைத் தெரிவித்தார்.

அவர் மக்களின் உணவுமுறையில் உப்பின் முக்கிய பங்கும், அதிக உப்பு உட்கொண்டால் அது ரத்த அழுத்தத்தை அதிகப்படுத்துவதோடு, ரத்த குழாய்களையும் பாதிக்கிறது என்பதை அழுத்தமாக சொல்கிறார். உப்பு உட்கொள்வதை ஒரு சிறிய விகித அளவு குறைத்தாலே, பல வித உடல் பிரச்னைகளைத் தவிர்க்கலாம் என்றும் அவர் தெளிவாக சொல்கிறார். அதோடு யூரின் கலரை பார்ப்பது மிகவும் முக்கியம் என்றும், கலரை வைத்து எவ்வளவு தண்ணீர் குடித்துள்ளோம், எவ்வளவு தண்ணீர் குடிக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கலாம் என்பதையும் எடுத்துரைக்கிறார். ஏனெனில் தண்ணீர் அருந்தும் அளவு அனைவருக்கும் ஒரே அளவு கிடையாது. ஒவ்வொருவருக்கும் அவரவர் உடலுக்கு ஏற்றார் போல் மாறுபடும் என்கிறார். டாக்டர்.ஆர்.சி, மருத்துவம் என்பது அறிவியல் மற்றும் கலை கலந்தது என்று நம்புகிறார். நோயாளியைக் கண்காணித்தல், நோயாளியின் உடல் நிலைப் பற்றிய முழு விவரம் மற்றும் கிளினிக் பரிசோதனை ஆகியவை அனைத்தும் ஒரு தேர்ந்த சிகிச்சை அளிக்கத் தேவைப்படுவது மிக முக்கியம். ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் இருந்தாலும், தேவையான சாதனங்கள் கொண்டு, சுருக்கமாக வேலைகள் செய்து முடித்து, நேரத்தை செலவு செய்வதில் திறமையாக செயல்பட்டால், எதுவும் சாத்தியம் என்பதை புரிய வைக்கிறார்.

சிறுநீரகவியல் துறைக்கு டாக்டர்.ரவிச்சந்திரன் அவர்களின் அர்ப்பணிப்பும், நோயாளிகளின் பராமரிப்பை மேம்படுத்த அவரின் அயராத உழைப்பும், அவருக்கு உலக அளவில் அங்கீகாரமும், மரியாதையும் சம்பாதித்து கொடுத்தது. அவரின் எதிர்கால கனவைப் பார்க்கும் போது, தேசமெங்கும் இருக்கும் 100 மருத்துவர்கள் கொண்டு ஒரு 10-வருட புராஜக்ட் ஒன்றுக்கு தன்னை அர்ப்பணிக்க தயாராக இருக்கிறார். இந்த மருத்துவர்கள் சிறுநீரகவியல் துறையில் நிறைய புது முயற்சிகள் செய்து, சிறுநீரக பிரச்னையால் கஷ்டப்படும் பலரின் வாழ்வில் ஒரு நல்ல திருப்பத்தை கொண்டு வரும் முக்கிய நோக்கத்துடன் பணி புரிவர்.

மருத்துவத் துறையில் அனுபவம், திறமை, அர்ப்பணிப்பு, குறிப்பிட்ட நோக்கம், புதுமையான கண்டுப்பிடிப்பு ஆகியவை இருந்தால், அவைகள் ஏற்படுத்தும் நல்ல மாற்றங்களை வெளிச்சம் போட்டு நமக்கு காட்டி நம்மை ஊக்குவிக்கிறது, அவரின் மருத்துவப் பயணம். இந்த குணங்கள் கொண்ட டாக்டர்.ரவிச்சந்திரன் அவர்கள்,மருத்துவத்துறையில், சென்னையின் ஒரு முழுமையான சாம்பியன் ஆவார்.

சுபாஷிணி கோமேஸ்வரன்